833

1

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்

மெஞ்ஞான அமிர்த
சங்கீத கீர்த்தனை,

இஃது

ஏர்வாடி 6-வது தெரு

வா. சே . முஹம்மதுயூசுபுகலீபாசாஹிபவர்கள் குமாரர்

ஹசன்முஹியித்தீன் ஆலிம்சாகிபு

அவர்களால் இயற்றியது

ஷையூர் ஷை தெரு க.முஹம்மதுஷாஅவர்களின்

குமாரர் தோல்வியாபாரம்

க. மு. மீருசாகிபு

மேற்படி மேலப்பாளையம்

உ. செ. முஹம்மது இபுருஹீம் தரகனார்

இவர்களின் பொருளுதவியால்

லெக்ஷிமி நரசிங்கபுரம்

கி.மு,சேகுமுஹம்மதுமரைக்காயரவர்களின்

வேண்டுகோளின்படி

ஷை ஹசன் முகையத்தீன் ஆலீம் சாஹிப் அவர்களால்

திருநெல்வேலி நூருல் இஸ்லாம்பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

ஹிஜ்ரி 1335—ம்ஹு

1916

இதன்விலை] [அணா 8

MADRAS

129088

மலையாளம் சரகம்

உதுமான்பிள்ளை சாஹிபவர்கள் குமாரர்

முகியித்தீன் செய்குசாகிப் உபாத்தியாயரவர்கள்

இயற்றிய வெண்பா

எல்லா உயிர்களுக்கும் ஏகனெனவே துதிக்கும்
அல்லாகிருபையினலாகமங்கள் நல்லாகத்
தேடும் ஹசன்முகியித்தீன் ஆலீமவர்தேன் மொழியாப்
பாடுமமிர்த சங்கீர்த்தனை யேப்பா

கலிவிருத்தம்

மேகத்தைக்கண்டு மிரண்டிடு மஞ்ஞைபின்
மோகத்தைக்கண்டு முழுங்கினவாறுபோல்
நாகத்தையாட்டு நவின்ற சங்கீர்த்தனை
தாகத்தைதீர்க்குந் தரணியுள்ளோர்களே.

விருத்தம்.

சொல்ல திலடங்காதிறை யவனபியின்
தூய்மணிவேத மென்றுளதில்
நல்லதாத் தெரிந்தவரையிலுந் தெளிந்து
நற்குண அசன் முகியித்தீனலீம்
அல்லல்கள் தீரவமிர்த சங்கீர்த்தனை
அருளொடும் பாடினாரதனை
தொல்லைகள் நீக்கிக் கேட்டிடச்சுருதி
துலங்கிடுமென் மொழிமாதோ,

ஆசிரிய விருத்தம்

அண்டபகிரண்ட முதலெண்டிசையு மோர்குண்டையில்
ஆளும் றஹமானருளினல் .
ஆசைமஹ்மூது நபிபாசஹையிலே முழுகி
ஆதிநெறி நீதியகலா .
கண்டவர்களின் புறுமுகம்மது யூசுபென்ற
காமில் கலீபாவின் புதல்வன்
காதிரியுல் ஹாபிலென ஓதும்பிரசங்கனென்
காணவெளி தானசங்கந்
துண்டமெனு மீராறு சுழிபேதமோர் நிறையில்
தூசிமுனே கூர்மைகொண்டு
சுகவாரி பெருகியக மகிழ்வா நிறைந்தெனது
துணையாகநின்ற கலீபா
தண்டமிழிலுள்ள பலபஞ்சகாவியங்களுந்
தான்கரைத்துண்டு கொண்டு
தாரணியில் அசன் முகியித்தீனலிமவர் கீர்த்தனையை
சாற்றினர் மழைபோலவே.

கலிவிருத்தம்.

கருவினிலமுதம் பொழிவதுபோலுங்
கார்பொழி பூமதம்போலும்
பொருவில்லா வாசம் பொழிவதுபோலும்
பூமகழ்புகழ்வதுபோலும்
மருவியே யமிர்தசங்கீர்த்தனே என்னு
மாப்பெருநூலினே நூத்துத்
தெருவினில் விட்டார் யூசுபுகலீபா
செல்வரென்று தித்திடுபவரே.

இதுவுமது.

திருமணிமுதலே இருளறுஞ்சுடரே
ஜெகமெல்லாம் நிறைந்தரும்பொருளே

ஒருமணியான முகம்மதுநபியே
உவமையிலடங்கிடாதிருந்த
அருமணியான முகியித்தீனெலியே
அருளெலாம் நிறைந்தருமொழியே
குருமணியான அமுர்தசங்கீர்த்தனேக்
கோதறஜெயமருள்புரிவீர்.

ஏர்வாடி 6-ந் தெருவிலடங்கிய

முகம்மதுஷாகாஜா ஆதம்ஒலியுல்லா அவர்களியற்றிய பதங்கள்

பல்லவி.

மகுபூபு பெண்ணே நீவாடி என் மயல்தீர
மகுஷூக்காயிணங்கவே ஓடி

அனுபல்லவி.

அஹ்பாபுநபிதிரு அருளைக்கவர்ந்துகொள்ள
வஹ்பிய்யத்தில் உலாம்கள் மனதில் வையாளிதுள்ள (ம)

நவத்ரவியமௌஜூதாய் இருபன்னாங்கு
நனிக்குணங்களுமௌஜூதாய்
கருமம்துவி சாமன்யமௌஜூதாய் விசேடமுகல்
துடர்சமாவாயமௌஜூதாய்
தவத்தோர்க்குறுமபாயஞ்
சதுவகையுமுஜூதாய்
பவம்பொருத்தருள் செய்யும்
பரப்ரம்மமான எங்கள் (மஹ)

நரயன் கிருபைமுத்தடி இதில்லாவிட்டால்
நரகம்புகுவோம் சீத்தடி
தாயிமுசலாத்தைபோத்தடி உந்தனிரு
ஸ்தனத்தைப்பிடித்த கூத்தடி

பாயுங்குதிரைதன்னைப்பாயர்மலென்வசமாய்
காயத்திமேல லகித்து
கருணைபுரிந்தருள (மஹ்

கட்டழகியான சித்ராங்கி உன்னடைக்கலம்யான்
காத்துரட்சித்தாளைமைவாங்கி
திட்டமாய்தூங்காமற்றாங்கி இலாஹ ஈல் ஹக்கை
ஸ்தோத்திரஞ்செய்யவே தாங்கி
எழுத்தும் மகாமும் சத்துமில்லாத மந்திரத்தை
பழுதன்றி கண்கல்பன்றி
பார்த்துசுஹூதுசெய்ய (மஹ்)

பல்லவி.

கந்தமலர்ப்பாதந்தந்து சொந்தமாகவே என்னை
காத்து ரட்சித்தருளும் ரஹ்மான்ஷா ஒலியே என்னை
காத்து ரட்சித்தருளும் ரஹ்மான்ஷா ஒலியே
அந்தாமறுஷிலேறி வந்தநபிதீனை கூறி
சிந்தையிற்றெளிந்து தேறி
இந்தலோகமெங்குமீறி (கந்)

லாயிலாக இல்லல்லாஹ ஊலாயில்லாநீக்கி நித்யம்
லாஸிகன்பி ஹனக்கிமெய்யாயிதுவே சத்யம்
ஈயில்லாத தேனையுண்டு மகிழ்ந்திடவே பத்யம்
என்றிரங்கு நீக்கிவீர்களென் தன் பைத்யம்
காயில்லாகனிகள் தந்து மாயையில்லாஞானந்தந்து
பாயில்லாத கப்பல்தந்து
பாக்கியஜெயக்ஷேமந் தந்து (கந்)

வருத்தவித்தை தண்ணீரன்றிமுளைப்பித்தோரே ஆண்பெண்
மனதிலாசையன்றி பிள்ளை பிறப்பித்தோரே
திறமாய் மாட்டெலும்பைமாடா எழுப்பினோரே
சிந்தையியற்கை இரம்பநன்றாயாக்கினோரே
குறைவில்லாத எல்லாஞானம் மறைவில்லாவதுமைதானம்
பொறையுள்ள இன்பமோனம்
நிறையுள்ள ஆனந்தகவனம் (கந்)

எங்கள் துஆ எல்லாம் கபூலாக்கவேணும் பரம
ஏகனுயகனிறங்கி பார்க்கவேணும்
உங்கள் யோக்யமெங்களுக்குக் கிடைக்கவேணும் நிதயம்
உறுதியாக பொய்யல்லாமலிருக்கவேணும்
சங்கைஹபீபாகவந்த் திங்கள் மஹ்பூபாய்சொந்த
மங்களப்பதங்கள் தந்து
சங்கைதிவ்யயோகந்தந்து (சங்

கலிவெண்பா.

ஆதிநபிபேரில்ப்பதமலங்காரத்திருப்புகழுங்
காதிறுலிமீதில் கந்தூரிச்சிந்து மோதும்பெயர்
மெஞ்ஞானவமிர்தசங்கீர்த்தனையை வேண்டியுளத்
தெஞ்ஞான்றுமறவாதிரு.

நொண்டிச்சிந்து வர்ணமெட்டு.

பல்லவி.

தஸ்லீம் தஸ்லீமே சடையில்
தங்கியிருக்குமுஸ்லீங்களுக்கும் (தஸ்)

தூண்டாச்சுடரொழிவா யிலங்குந்
துய்யாநபிமார்களுக்கு மாதர்கட்கும்
தீண்டும்வரைகாத்தா லடைத்த
தோளாபுபக்கருண்மை சித்தீக்குக்கும்
வேண்டாச்செயலதுக்காய் மகனை
விரள அடித்த உமறகத்தாபுக்குந்
தோன்றல் நபிமகளார் தமக்குறுந்
துய்யஉதுமான் அலியார்தமக்கும் (தஸ்)

வல்லவன் வஹியதனால் விவாகம்
வானவர் முடித்துக் கலிமகன மரோர்
எல்லவரும் அறிய உலகில்
ஏந்தியே நிருபமதை நபிக்களிக்க
தொல்லைகளது நீங்க நபியுந்
தோளாவிதமக்குமணமுடித்த
நல்லவர் பாத்திமத்தை அநுதினம்
நாடித்தினந் தினஞ்சலா முரைத்து (தஸ்)

பூங்காவினுக்கரசாய் சொர்க்க
புகழ் தரும் பெரியோன் தானமைத்த
தூங்கா திறையவனே வணங்கு‌ங்
துய்யஹஸன் ஹுசைனையுமிகபோற்றி
பாங்காய்ஆல் அசுஹாப் பவர்கள்
பாதமலர்த்தாள் பணிந்து மிகத்துதித்து
நீங்காத டியேனு மென்றும்
நினைந்து சலாமுரைத்து புகழ்ந்தேனே (தஸ்

ஒலிமார் தமக்கரசா யுலகில்
உதித்த முகியித்தீனுண்டைக்கும்
நலமாம் நாகை நக ராளும்
நாயகர் ஷாகுல் ஹமீ தொலிக்கும்
மலேபார் தனைச்சார்ந்த பீர்மு
கம்மதொலியுல்லாசாஹி புக்குங்
கலையது மிகவாய்ந்த கண்மணி
காஹிற்பதிவாள் சுலைமானொலிக்கும் (தஸ்)

மங்கா மாமணியா யிலங்கும்
மன்னர் ஷம்சுத்தீ னொலிநாயகர்க்குஞ்
சிங்காரஞ் சிறந்த அஹ்மதைச்
சேர்ந்த சதகத்துல்லா தாயகர்க்கும்
எங்காத லுக்கருளை கொடுக்கு
மேந்தல் ஷாமொலி சலாகுத்தீனுக்கும்
அங்கமதுகுளிர மதுஹை
அநுதினம் படிப்பவர்கேட்பவர்க்கும் (தஸ்)

மோகனசரசமானே என்றமெட்டு

பல்லவி

மோகனஷபா அத்தடி மோகனராம் ஹாமிதடி
மோட்சந்தருமவர்நேசம்
முறையாக வோதிடில்வாசம் அவர்
முத்தியதை சித்தமதில் நித்தம் வையடிபாசம் (மோ)

அட்டதிசை எட்டுமவர் வெற்றியரசானோர் அஜ
பாய்நடினமானோர் அறு
ஷேறிஜி ஹாருய் வசனம். ஹாூசு னு பிருஷானோர் (மோ)
கண்மணியாயுலகமதை தாக்கும் குருதானே கன
சத்யஞ்செய்கிறேனே அவர்
காட்சியதை மோட்சமுடன் கருது மோனடி தேனே. (மோ)

உலகமதுக்கோரொளிவாய் வீசிடும்பிரகாசர் உப
தேசிக்குந் திருநேசர் அவர்
ஊக்கமதை நோக்கமுடன் தாக்கிடும் விசுவாசர் (மோ)
காவிற் சிறந்த மக்கமாநகர் வருங்கோனே கன்னி
யாமினர் பெறும்மானே அவர்
கரதலினல் முவுலகுங் கண்யந்தருந்தேனே (மோ)

கொஞ்சந்தயவு செய்யடி என்ற வர்ணமெட்டு

பல்லவி

நெஞ்சமுருகி தையலே நீசென்றழைத்து நபி
நேசந்தந்தாளச் சொல்லடி நிதமும் நீ
நேசந்தந்தாளச் சொல்லடி அடி
நிச்சயமாகவே இட்சணம் நீ சென்று
பட்சமுடனபி பாதத்தைத்தேடியே (நெ)

கண்டவுடன் கவலைகாணுது தேடு நீ
செண்டுமலர்ச் சரணமே ஒய்யாரியே
செண்டுமலர்ச்சரணமே அடி
காரணராகிய காரணராமடி
பூரணமாமஹ் மூதரைத்தேடியே (நெ)

முன்னோன் மறைபுகழ முறுசல்கரசராம்
அன்னுன் மறைக்குஞ் ஜெம்மலாஞ் சிங்காரமாம்
அன்னுன்மறைக்குஞ் ஜெம்மலாம் அடி
முன்னேமயில் வடிவாகிய மோகன
கணணேஅஹ்மதை இன்னமுந்தேடியே (நெ)

மக்கப்பதி பிறந்து மிக்க விசேஷமாய்
ஹக்கன் தனக்கும் வாசமாய் நல்லநேசமாய்
ஹக்கன் தனக்குவாசமாய் அடி
மங்குல் குடைமதினாவினில் வாழ்கின்ற
திங்கள் மதியமைதெய்வப் பிரகாசரை (நெ)

அன்னநடைகள் போன்றமின்னார் மன்னுமினார்
கண்ணுனபாலராமடி குணசீலராங்
கண்ணுனபாலராமடி அடி
அம்பர்மணமது இன்பமாய்வீசும்
நண்பர்தினந்தொழும் நபியைத்தேடி (நெ)

ஸ்ரீ ராமச்சந்திரனே என்ற மெட்டு

பல்லவி

அன்னமே அஞ்சுகமே கொஞ்சு முகம்மதியா
பஞ்சாட்சரண் பணிந்து நில் நில் நில்
ஆகமான கலிமாவுடன்
விவேகமான நபியாதுடன்
ஹாமீதஹமத் மஹ்மூது முகம்மதெனுங்
காத்திமுலன்பியாபாதஞ்செல் செல் செல் (அன்)

மங்காதமாமறையோ ரெங்கும் ப்ரசங்கமான
மஹ்மூது நன்னபிபால்சொல் சொல் சொல்
மாதவர்க்கு மஹாநாயகர் நால்
மாமறைக்குஞ் ஜெகபோதகர்
சங்கீதமோன தொனிசிங்காரமாய் விளங்குந்
திங்கள் முகம்மதிடஞ்செல் செல் செல் (அன்)

அன்பு மிகத்துலங்கு மின்பமொழிவிளங்குஞ்
செம்பொன் னபியைத்தேடிப்பார் பார் பார்
அந்தமாங்கு பிரையோட்டினோர்
சொந்த மாங்கலையைப்பூட்டினோர்
துன்பவினைகள் நீங்கி இன்பசுகங்களோங்க
பண்பாய் நபியிடத்திற்சேர் சேர் சேர் (அன்)

கன்னல்மொழிகதிஜா அன்னநடைக்கிசைந்த
மன்னாடிபுகழைப்பார் பார் பார்

179088

காதலோடுகதம் போற்றியே கன
மாதவர்கள் பதமேற்றியே
பொன்னின் புகழ் மதிஞ்நன்னிலத்தின்னமைந்த
கொண்டல் பதம்பணிந்துவா வா வா (அன்)

கன்னியே வள்ளியே என்றவர்ணமெட்டு

பல்லவி

அன்னமே அஞ்சுகமே கொஞ்சமூகமதியா
பஞ்சாட்சரத்தைச் சொல்லடி பலமனுக்கள்
எண்சாணுடம்பானதை விள்ளடி அடி
அன்னப்பசுங்கிளி சொர்ணமேதேன்மொழி
நன்னயமாகவே இன்னிலஅஹ்மதின்
பஞ்சாட்சரத்தைச்சொல்லடி பலமனுக்கள்
எண்சாணுடம்பாதை விள்ளடி (அன்)

கானனதிலேபெருன்னதி தானுகவே ஏகியழைத்திடுங்
கோனுகியகுன் மஹ்மூதாச்சு குணமே அந்த
தீனனது மெய்யமஹமூதாச்சு அடி
கண்மணியாகிய மூன்மணியானதை
காணுமனிதனைப் பூணுதலாக்கிய
கண்டோர்மன மகிழ்ந்திடுவாரிங்கே கனியமிர்த
மூண்டோர் புகழோங்கிடுவா ரங்கே (அன்)

காடதிலே பிடித்தவேடன் கலைமானதை மீட்டியே
காக்குந்திருகண்மணி மஹ்மூதாங் கனதிசொர்க்கஞ்
சேர்க்கும் நவமாமணி மஹ்மூதாம் அடி
கட்டரமாகிய நெட்டரங்கூறிடுங்
துஷ்டவிரோத இருள்குபிரோர்களை
கண்டங்கோடாரிவாள் கொண்டு கலிமாஓங்கத்
துண்டஞ்செய்தார்கள் சினங்கொண்டு (அன்)

மானேமடமாமயிலே செந்தேனே நபியன்பு மிகுந்துளக்
தானேமனம் வைப்பது நிச்சயமே என்றென்றுஞ்சென்று
தேனே மொழிந்திடு இட்சணமே அடி
மஞ்சக்குடைக்கா மாமலாஹ்மதர்
கஞ்சமலர்ப்பதம் நெஞ்சினிலாக்கிட

சேர்க்குந்திரு சொர்க்கமெனும் பூங்கா வனத்திலிருக்க
ஆர்க்குமது சற்குணமே தீங்கா (அன்)

எண்ணி இருதயபத்தால் புண்ணியமாகுவரை
ஏகாந்தமான பெருமவழியில் யெழுந்துநடந்து
ஹா—ஹா—வென ஆகிடுமெய்வழியில் அடி
ஏகிடும்நேர்வழி போகிடமானிடர்
இங்கு இருப்பதால் சங்கையதாகுமோ
ஏகும் வழியைச்சொல்லடி மணிமந்திர
மாகும் வழியை விள்ளடி. அடி

ஆதிமூல நாதர் என்றவர்ணமெட்டு.

பல்லவி.

ஆதிவேதரான எங்கள் அஹ்மதே சபா
அன்புடனே இன்பபதத்தை நம்பினேன் வபா (தி ஆ)
பஞ்சபூதமஞ்செழுத்தின் னுமமுற்றவா
நெஞ்சமுருகி அஞ்சலானேன் செய்யிதே சுபா. (ஆதி)

இந்திரனர் வந்தழைக்க சொந்தமானவா
அந்தரங்குலுங்க அறுஷில் சென்றமாதவா (ஆதி)
ஐம்பதை ஐந்தாய்ச்சமைத்த செம்பொன் மாதவா
நம்பினோர்க்கு நற்கதியை நவிலு நீதவா. (ஆதி)
மாதமுறைமாரிசூழ் மக்காவின்னுயகா
சீதமாப்பதமெனக்கருள் செல்வதாயகா. (ஆதி)

ஆயாசையா என்ற வர்ணமெட்டு,

பல்லவி.

செம்பொன் வாசா ஜெகம்புகழும் ராஜா
எமலோக பரனேசா. (செம்பொன்)

அனுபல்லவி.

அன்பாயழைத்தேனே கோமானே என்ன
னுவல் தீருமையா இப்
பூவினுமை மெய்யா யான்
காதல்கொண்டேனையா இம்

மண்டலமும் விண்டலமும்
மென்றிசையுந் தொண்டனைக்காத்தருள் (செம்)

அண்டமெல்லாம் புகழும் நபிநாதா
அடியேனெனையாள்வேதா
தென்றலுலவுமக்கவாழ்வே
தெளிந்தமறை நூலா
திருவாமினர் பாலா
திவ்வியகுணமேலா என்
கண்மணியே விண்மணியே
மாமணியே மஹ்மூது முகம்மதே (செம்)

வானின் முழுமதியழைத்த முன்னாள்
வருந்தீராய்ச் செய்மன்னு
கோனேனுடன் பகருந்தீரா
குருநபி என்மோரா
கொடியவினை தீராய்
அடியேனெனைநோய்
பார்த்தருள்வாய் காத்தருள்வாய்ச்
சேர்த்தருள்வாய் நேத்ரமுகம்மதே (செம்)

மான்மரைகளூடும்புமுயலோடி
மானையழை நாதா
கானில் நதியழைத்தநேயா
கனதிமொழிவாயா
கமலநந்திரேகஞ்சாயா
மகிழும்பாதந்தோயா
சந்ததமு மெந்தனெனக்
குந்தன்பதந் தந்தருள்வாய்ச் (செம்)

கந்தாஞ்சூழ்மக்கா நகர்வாழப்
துல்லாசேபானேரே
கரத்தில் நீராரழைத்தநீதா
கருணை செய்யும வேதா
கவலைநீக்கும் நாதா
காத்திடுமே மஹ்மூதா

ஹாஷிமேயா காசிமேயர்
தாசிமேயா யாசீன் முகம்மதே (செம்)

மையலாகினேனுன் என்ற மெட்டு

பல்லவி.

மையலாகினேனுன் மாதே
மதியையழைத்த நபிமீதே (மைய)

அநுபல்லவி.

தையலே இவ்வேளை தாழ்தல் முடியாது
கைகொண்டேனெந் தாயே கவலைகளுந்தீர
கலங்குதே நெஞ்சமுந்தானே
கஞ்சமுகத்தழகியாளே (மைய

மறைமுறை கோடிசர்ப் பாஷைவிளையாடி
இடங்களெல்லாந் திங்கள் தெய்வப்ரகாசமாய்
வாசமாமல்லிகை வீசும்
வள்ளல் நபியைப் போற்றிவாடி (மைய)

பஞ்சமாபாதக மஞ்சையும்போக்கி நீ
கஞ்சமலர்ச்சரண் தஞ்சமென்றோதி நீ
நெஞ்சமுருகுதே போடி
அஞ்சலுடஞ் சென்றுவாடி (மைய)

பூரணச்சந்திரிகைப்போலே இவர்மேனி
பொன்னுலகேழும் புகழ்சேர் மஹ்மூதைத்
தாமிதமில்லாதுத்தேடி
தையலே நீ சென்றுவாடி (மைய)

அதிரூப என்ற வர்ணமெட்டு

பல்லவி.

அதிரூபலாவண்யம் ஆனால் நபியைப்போல்
ஆசையுங்கண்டதில்லையே

அநுபல்லவி.

மதியோ இவர் வதனம்
மாலையணிபுயமோ

மருவலர்போற்றும புண்ய மாதவ நபி இவர்
சாரி ரீ சரிகாமகமாரிச
தாரிநம் தரிதொம் தரிநம்தரி
சஸ்ஸரினி சரிநிச் தநிதநிசரிநி
சரிகமபதநித சரிக்ரிநிசதோம் (அதி)

எங்குமிவர் புகழிலங்குமே
ஏகனருஷினிலேகியப்போதுநல்
மோகமாய்த்திருமாமொழிபேசிய
யோகம்பெற்றிடுமாகமதானதை
வாகுடன்தரும் வள்ளலெனுமிவ (செங்)

எந்தவஸ்திலுமுந்த சிருஷ்டித்
தந்தநாதரை முன்னபிமார்களும்
அந்தமோடுடன் போற்றி புகழ்ந்திடுங்
கந்தரக்குடையோடு நடந்தவ (செங்)

இமயவரெவருடனமரரும் புகழ்ந்திட
திமிரமிதனிலுமுந்தமருஞ்சூழ்ந்திட
கமறதை யழைத்து நல்விமரிசை பெற்றிட
சமரிசைசெய்யும் ஹபீபரசருமுகந்தவர்
எங்குமிவர் புகழிலங்குமே இவரை
இணங்கி ஈமாங்கொண்டால் போதுமே
ஏதமில்லாதான் திரு தூதாசெங்கமலபொற்
பாதம்பணிந்தேன்மஹ் மூதுமுகம்மதெனும் (சாரி அ)

மங்கை ஆமினாரீன்ற பாலராம்,
மாதுமறியமணைத்து அணைக்க
ஜோதி எங்குஞ் ஜொலித்து ஜொலிக்க
தீதில்லாமொழிரம்பைகளுரைக்க
திவ்யநற்கனிதேனமிர்தம்போல் (மங்)

மண்ணுலகெவரும்போற்றி போற்றிட
விண்ணுலகவரும் வாழ்த்தி வாழ்த்திட
அண்ணலப்துல்லா ஆசையால் வந்திட
இன்னிலத்திலும் யாவருமெய்த்திட (மங்)

179088

மார்க்கமறியா அறிவினர்கள் துதித்த
மூர்க்கமுள செயித்தான் கெட்டிட
தீர்க்கமுடன் தவங்களுற்றிட அடி
யார்க்கும் பரகதியைச் சேர்ந்திட
மங்கை ஆமீனாரீன்ற பாலராம் வரும்
அன்னைகதிஜாமணவாளராம்
மக்காவெனும் நகரில் மிக்காசியற்றுமென்
துக்கவினைகள் நீக்கும் ஹக்கன் முகம்மதெனும் (சாரிஹ்)

சோம சேகரா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஜேமசேகரா மிருந்தநூலா நீலா முந்த
மாமயில்வடிவாயிருந்த பாலா சீலா (ஜே)

அனுபல்லவி.

ஜேமம்பெற ஆவலுற்று பாடினேனே இந்த
ஜெகம்புகழுந் திவ்யச்சரண்கூடினேனே உந்தன்
ஞமமதை யோதிநிதம் நாடினேனே காந்த
நாளும் வந்து காத்தருளத்தேடினேனே (ஜே)

அந்திதனிலே நடந்துசென்று சென்று வந்த
அமரரெல்லாமுமைத்துதித்துக்கொண்டு கொண்டு மகிழ்
சொந்தமாயிறையவனைக் கண்டு கண்டு வெகு
சுபமொழிகள் பேசிவந்தீரன்று அன்று (ஜே)

அந்தரமதியழைத்த நாதா நீ தா இந்த
ஆலமெல்லாம் புகழுங்குரு சீதாபாத உயர்
கந்தாஞ்சூழ்மாமதிறுவேதா தூதா எங்கள்
காத்திமிறசூலே மஹ்மூதா பாதா (ஜே)

மண்டலத்தோர்கள் பணிந்து சூழுஞ்சூழும் திரு
மங்கைகதிஜா உவந்து வாழும் வாழும் இந்த
தொண்டனைக் கண்பார்த்து நிதமாளும் ஆளும் எங்கள்
தோன்றலே முகம்மதே என்னாளும் நாளும் (ஜே)

மருவினுல் என்றவர்ணமெட்டு.

பல்லவி.

ஹக்கனைக்காண்பது கனுமல்லோமனமே
காணுவிடிலோகை சேதம் தினமே
ஹக்குல் எகினை கருத்தில்லை நயமே
ஹக்கலாதொன்றில்லை என்றறி சதமே (ஹக்)

அழகான சற்குண ஆச்சரியமாதே
ஆமந்து பில்லாஹி உன்னசமீதே
தெழிவாய்ச்சமைந்ததால் திகழும் ஜவ்வாதே
தேவாதி தேவர்கள் சூழ்வாரப்போதே (ஹக்)

பூரணச்சந்திரனைனுளி போன்ற மின்னே
புகமோங்கும் பதினறு வயதுள்ள கண்ணே
மாருது எப்போது நீ எந்தன் முன்னே
மாதாவைப்போல் வரமஹ்பூபே சொன்னேன் (ஹக்)

வஞ்சியே உன் ஜனனம் சாயூட் சகாந்தி
வகை வகையாய் ஸ்தானுதிபதிகளுனை ஏந்தி
கொஞ்சியே வந்தனங்கோடிகளர்ந்தி
கோதில்லா மாதவமே உனை சிந்தி (ஹக்)

பூங்காவனமான புஷ்பத்துக்கிறையோ
புண்பனை என் செய்வேன் அனியாய்த்துறையோ
பொய்யாமுலகில் பொய் பேசினுல் முறையோ
பொய்யாப்பனுவை கை ஏற்பது நெறியோ (ஹக்)

மெஞ்ஞான போதமுண்டு என்றவர்ணமெட்டு.

பல்லவி.

சிங்காரம் பாரன்னமே ஆத்மமாளிகையில்
சிங்காரம் பாரன்னமே திரு
ஜோதிவடிவான சொந்த மஹ்மூது
ஜாதி பலதாகி நின்ற சூட்சங்கண்டு (மெஞ்)

அனுபல்லவி.

மக்க நகருண்டு மங்காதவமுண்டும்
மிக்க அபுஸம்ஸ்ம் மேலாங்கிணறுண்டும்
சபாமறுவாமலைஜோடியுண்டும்
அதிலேகி (மெஞ்)

சரணம்.

வல்லநாயகனின்கஃபாஉண்டு மதை
நாடித்தவாபு செய்யவேண்டும் அந்த
மாங்கஃபாமைய மதிமிலன்றுஞ் சொற்க
மாஹஜறுல் அஸ்வதினை கண்டுஞ்
சித்தமுடன் மனவாக்குடனே
சுத்தமதாய் மூத்திபோர்
சத்தியமே நித்தியமுஞ்
சுத்தவடிவான ஜெகஜோதிபோல்
துலங்கியிருப்பாய் சொன்னேன்
என் கண்ணே (மெஞ்)

ஒரு நாளைக்கறுபது நேர மிறை
நோக்கமுண்டாகுதுந்தன் போதம் அந்த
போதமுடன் மதினாபாதங் கண்டால்
பூங்குயிலே உன் மன சங்கீதஞ்
சங்குடனாதமுழங்குதுபார்
மங்களமாயங்கமதில்
எங்கள்நபி நாயகத்தின்
சித்தாந்த புண்ய ஸ்தலமுண்டுமே
கிடைத்தாலுனக்கென்றுமே
சுகமுண்டுமே (மெஞ்)

179088

நானளமேத்தல் தூல்ம் என்றவர்ணமெட்டு

பல்லவி

தானேயமைந்தகோலம் நாளை
வீணாயழிந்துபோமோ இறை (தானே)